OS.No. :8/2024

நாள் : 13.03.2025

பி.வா.சா. :3

பெயர் : ராஜராஜேஸ்வரி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு 2002 ல் திருமணம் நடந்தது என்றால் சரி. என் மாமனார் சக்கரவர்த்தி 1996 ல் இறந்து போனார். என் கணவர் 2020 ல் இறந்து போனார் என்றால் சரி. பிராதில் எத்தனை ஐட்ட சொத்து சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஐந்து ஐட்ட சொத்து சேர்க்கப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். 1ம் ஐட்ட சொத்து எங்குள்ளது என்றால் கச்சேரி ரோட்டில் உள்ளது. அது தான் எங்கள் குடும்ப முதல் பூர்வீக சொத்து என்றால் அந்த நிலம் என் மாமனாருடையது கட்டிடம் என் கணவர் கட்டியது. அந்த இடத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் இரண்டு வீடுகள் (முதல் தளத்தில் ஒரு வீடு, இரண்டாவது தளத்தில் ஒரு வீடு) 13 கடைகள் உள்ளது. வீடுகளுக்கு மேல் ஒரு மொட்டை மாடி உள்ளது என்றால் சரி. என் மாமனாருக்கு பூர்வீக சொத்து எந்த ஊரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. என் மாமியார் இந்திராணி பெயரில் சொத்து இருந்தது. என் மாமனார் கச்சேரி ரோட்டில் உள்ள சொத்தில் கல்லுப்பட்டறை நடத்தி வந்தார் என்றால் சரி. நான் திருமணமாகி வந்தபோது முதல் மாடியில் உள்ள வீட்டில் இருந்தேன். அதன்பிறகு இரண்டாவது மாடிக்கு நானும் என் கணவரும் போய்விட்டோம். திருமணமாகி கச்சேரி ரோட்டிற்கு நான் வந்தபோது கடைகள் இருந்தது என்றால் சரி. கீழ் மனை குமரக்கட்டளை கோவிலுக்கு சொந்தமான இடம் என்றால் சரி. என் மாமனார் அதன் குத்தகைதாரர். அந்த இடத்திற்கான பகுதி கட்டியதற்கான ரசீது ஜெயக்குமார், பிரகாஷ், கோபாலக்கிருஷ்ணன் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பகுதி பணம் கட்டியது என் கணவர் தான். பகுதி ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. என் கணவருக்கு ஒரு அண்ணன் இருந்து திருமணமாகாமல் இறந்து விட்டார் என்றால் சரி. எய்ட்ஸ் வந்து இறந்துவிட்டார். அவர் இறப்பிற்கு பிறகு சக்கரவர்த்திக்கு என் கணவர் தான்

J. Rajarajeswari

மூத்த மகன் என்ற முறையில் சொத்துக்களை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் மாமனார் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி 1991, 1992ல் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அதன்பிறகு என் கணவர் தான் சொத்துக்களை பராமரித்து வந்தார். என் மாமியார் இந்திராணி முதல் மாடியில் உள்ள வீட்டில் இருக்கிறார். கடைகளை வாடைகைக்கு விட்டு வாடகை வசூல் செய்வது என் கணவர் என்றால் சரியல்ல. கடைகளை வாடகைகக்கு விடவில்லை. எல்லா கடைகளிலும் எங்கள் பொருட்கள் தான் உள்ளது. மேற்படி விவரத்தை எதிர் வழக்குரையில் தெரிவித்துள்ளோமா என்றால் தெரிவித்துள்ளோம். 13 கடைகளிலும் என்ன சாமான் வைக்கபட்டுள்ளது என்றால் காருக்கு தேவையான Spare parts, Tools, சாமிசிலைகள், தார்பாய், படுதாக்காள், மண்வெட்டி கடைப்பாறை போன்ற வயலுக்கு தேவையான சாமான்கள், கட்டிடம் கட்டுவதற்கு தேவையான சாமான்கள், சமையலுக்கு தேவையான பெரிய பெரிய எண்ணெய்சட்டி, போன்ற பொருட்கள் ஆகியவை உள்ளது. சமையல் செய்வதற்கு தேவையான சாமான்கள் விற்பதற்காக தான் வைத்திருக்கிறோம். மண்வெட்டி, கடப்பாறை போன்ற வயலுக்கு தேவையான சாமான்களும் விற்பனைக்காகத்தான் வைத்திருக்கிறோம். என் கணவர் நிர்வாகம் செய்யும்போது என்னென்ன கடைகளில் என்னென்ன பொருட்கள் வைத்திருக்கிறார் என்று கணக்கு எழுதி வைத்திருக்கிறாரா என்றால் பொருட்கள் வாங்கியதற்கு எழுதி வைத்திருக்கிறார். விற்றதற்கு எழுதி வைத்திருக்கிறாரா என்றால் எழுதி வைத்திருக்கிறார். அந்த கணக்குகள் தற்போது என் வீட்டில் உள்ளது என்றால் தெரியவில்லை தேடினால் தான் தெரியும். கடையில் இருந்து எங்களுக்கு மாதம் 35 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால் 20, 22 ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். என் மாமனார் 1996ல் இறக்கும்போது என் பெயரிலோ, என் கணவர் பெயரிலோ சொத்து எதுவும் இல்லை என்றால் சரி. அப்போது எனக்கு திருமணமாகவில்லை. என் கணவர் ஜெயக்குமார் 2020ல் இறக்கும்போது அவருக்கு சுமார் 50 வயதிருக்கும்.

J. Rajarajeswari.

எனக்கென்று தனிப்பட்ட வருமானமோ சம்பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. கடை வைத்திருந்தேன். நான் படித்தது மூலம் சம்பாதிக்கவில்லை என்றாலும் பிஸ்னஸ் செய்து தான் சம்பாதித்தேன் என்றால் சரி. நான் மணக்குடியில் உள்ள இடத்தில் கடை வைத்து நடத்தினேன். 2005 ல் அந்த இடம் வாங்கினோம் அங்கு கல்லுப்பட்டறை திறந்தோம். கீழ் மனை சக்திபுரிஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரி. அந்த மனை 3000 சதுரமீட்டர் விஸ்தீரணம் உள்ளது. அடிமனையின் பகுதி என் பெயரில் தான் உள்ளது. அதில் மாடி வீடு உள்ளது என்றால் சரி. 2015 ல் தான் அதைக்கட்டினோம். 25 லட்ச ரூபாய்க்கு லோன் போட்டு கட்டினோம். லோன் வாங்கியதற்கு பாஸ்புக் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. லோன் வெள்ளாந்தெரு வீட்டை சுந்தரம் பைனான்ஸில் அடமானம் வைத்து 30 அல்லது 40 லட்சம் ரூபாய் என் கணவர் பெயரில் வாங்கினோம். அதன்பிறகு அதை ஸ்டேட் பேங்கிற்கு மாற்றிவிட்டோம். அதற்கான பாஸ்புக் வங்கி ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. வெள்ளாந்தெரு வீடு என் கணவர் பெயரில் தான் இருந்தது. அது வழக்கு சொத்தில் எத்தனாவது ஐட்டம் என்றால் தெரியவில்லை. பகுதி பத்திரம் என் பெயரில் 2005, 2006 ல் ஏற்பட்டது. அந்த மனையில் உள்ள மாடி வீட்டு blue print approval யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது என்று நினைக்கிறேன் சரியாகத் தெரியவில்லை. வெள்ளந்தெரு வீடு வாங்கப்பட்டதா கட்டப்பட்டதா என்றால் வாங்கப்பட்டது. 2009 அல்லது 2010 ல் வெள்ளாந்தெரு வீடு 5 லட்சம் ரூபாய்க்கு வாங்கினோம். அதுவும் என் நகைகளை வைத்தும், என் அண்ணன் கொடுத்த பணத்திலும் வாங்கினோம். என் அண்ணன் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் நினைவில்லை. என் அண்ணன் வெளிநாட்டில் இருக்கிறார். என் அண்ணன் வெளிநாட்டில் இருந்து எப்படி பணம் அனுப்பினார் என்றால் வங்கி மூலம் தான் அனுப்பினார். அந்த வங்கி பாஸ்புக் என்னிடம் உள்ளதா என்றால் பார்க்கவேண்டும். என் அண்ணனுக்கும் மற்றும் என்

J. Rajaneeswari

குடும்பத்தினருக்கும் எனக்கு பணம் கொடுத்து உதவும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் பணம் கொடுப்பார். ஸ்டேட் பேங்கில் நாலு சகோதரர்கள் சேர்ந்து 4 லட்சம் ரூபாய் லோன் வாங்கியது தெரியுமா என்றால் என் கணவர் தான் வாங்கினார். மற்றவர்கள் கேரண்டி கையெழுத்து போட்டார்கள். அதை கட்டியது என் கணவர். அதற்கு வவுச்சர் உள்ளதா என்றால் இருக்கும். அதற்கு பத்திரத்தை அடமானம் வைத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை மீட்டார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரி. 2, 3 பிரதிவாதிகள் வெளிநாட்டிற்கு சென்றிருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2, 3 பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருந்து தனது அம்மா இந்திராணிக்கு பணம் அனுப்பினார்கள் என்றாலும் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த பணத்தை எல்லாம் குடும்ப நிர்வாகத்திற்காக என் கணவரிடம் என் மாமியார் கொடுத்து விட்டார் என்றால் அது பொய். அது சம்பந்தமாக சில வவுச்சர் என் மாமியார் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என் கணவர் தனிப்பட்ட முறையில் தொழில் எதுவும் செய்யவில்லை என்றாலும் குடும்ப பொதுப்பணத்தில் இருந்து பல தொழில்கள் செய்தார் என்றால் சரியல்ல. அவர் தனிப்பட்ட முறையில் தான் தொழில் செய்தார். சிதம்பரத்தில் என் பெயரில் ஒரு அப்பார்ட்மெண்ட் உள்ளது என்றால் சரி. அது லோன் போட்டு தான் வாங்கினோம். அதுவும் பொதுகுடும்ப பணத்தில் இருந்த வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எவ்வளவு ரூபாய்க்கு அந்த அப்பார்ட்மண்ட் வாங்கப்பட்டது என்றால் 26 லட்சம் ரூபாய்க்கு வாங்கினோம். அதில் ஒரு இரண்டு லட்சம் பணமாக கொடுத்தோம். பரோடா வங்கியில் லோன் வாங்கி அங்கிருந்து சுந்தரம் பைனான்ஸ்க்கு மாற்றி அங்கிருந்து ஸ்டேட் பேங்கிற்கு லோனை மாற்றினோம். அது சம்பந்தமான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த லோன்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதா என்றால் இல்லை. கட்ட முடியாமல் ஏலத்திற்கு வந்துவிட்டது. சிதம்பரம் சொத்தும், லோன் கட்ட முடியாமல் ஏலத்திற்கு

J. Rejan[illegible]

வந்துவிட்டது. பிரகாஷ் வெளிநாட்டிற்கு போய் சம்பாதித்தார் என்றாலும் அந்த பணத்தில் தன் பெயரில் சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் கோபால் பெயரில் வாங்கியதை பிரகாஷ் பெயருக்கு மாற்றிக்கொண்டார். கோபால் பெயரில் எந்த வருடம் சொத்து வாங்கப்பட்டது என்றால் 2005, 2006 ல் சீர்காழி டவுனில் வாங்கினோம் அதன் அடிமனை கோவிலுக்கு பாத்தியப்பட்டது. என் கணவர் கோபால் பெயரில் அந்த சொத்தை வாங்கவில்லை என்றாலும் பிரகாஷ் தன் பெயரில் வாங்கிகொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் அதற்கு பணம் கொடுத்திருக்கிறார். என் பெயரில் சிதம்பரம், மணக்குடி, என் கணவர் பெயரில் வெள்ளாந்தெருவில் உள்ள சொத்துக்களுக்கு கிரயப்பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அவை வங்கியில் அடமானத்தில் உள்ளது. தாவா 5ம் ஐட்ட திருக்கடையூர் சொத்து எங்களுடைய சொத்து இல்லை. தவறாக சேர்க்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை ஐவநல்லூர் கிராமத்தில் என் மாமனார் பெயரில் சொத்து உள்ளது தெரியுமா என்றால் தெரியும். எவ்வளவு சொத்துள்ளது என்று தெரியாது. என் கணவர் இறந்தபிறகு 2020 முதல் 2022 வரை கடைகள் பூட்டப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் இறந்தபிறகு நான் திறக்க சென்றால் என் மாமியார், பிரகாஷ், கோபால் ஆகியோர் என்னை அனுமதிக்காமல் பிரச்சனை செய்தார்கள். கொலை மிரட்டல் விடுத்தார்கள். பூட்டில் fevicol வைப்பார்கள். என் மாமியார் பிரகாஷ் வீட்டில் இருக்கிறார். அவ்வப்போது முதல் மாடியில் உள்ள வீட்டிற்கு வந்துபோவார். என் கணவர் இறந்த பிறகு என்னால் ஏற்பட்ட பிரச்சனையால் பிரகாஷ் வீட்டிற்கு போனார் என்றால் தவறு. 2022 ல் குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். யார் பேரில் என்றால் இந்திராணி, கோபால், பிரகாஷ், ஜெயந்தி ஆகியோர் பெயரில். அதன்பிறகு கடையை திறக்க முடிந்தது. DVC ல் என் மீது 3 FIR போட்டார்கள் என்றால் சரி. ஆனால் போலிசை கைக்குள் போட்டுக்கொண்டு என் மீது பொய் வழக்கு போட்டார்கள். நான் கச்சேரி ரோட்டில் உள்ள வீட்டிலும் இருப்பேன், மணக்குடியில் உள்ள வீட்டிலும்

J. Rajarajeswari

இருப்பேன். நான் உயர்நீதிமன்றத்தில் ஒரு சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரி. அதில் என் கணவர் எனக்கு ஒரு உயில் பத்திரம் எழுதிவைத்ததாக சொல்லி அதை தாக்கல் செய்தேனா என்றால் நினைவில்லை. வாரிசு சேர்ப்பதற்காகத்தான் அந்த மனுவை போட்டேன். அதில் என் கணவரின் அம்மாவை வாரிசாக சேர்க்கவில்லை என்றாலும் உயில் படி எங்களுக்கு சொத்து என்று சொன்னேனா என்றால் நினைவில்லை. உயர் நீதிமன்றத்தில் CMP 20029/2021, in CRP. (PD) 4065/2016, Dated: 11.03.2022 என்ற உத்தரவில் உயில் பத்திரத்தை விசாரணை நீதிமன்றத்தில் இருதரப்பினருக்கும் உரிய வாய்ப்பு கொடுத்து நிரூபித்து உயிலின் உண்மை தன்மை குறித்த சாட்சியத்துடன் உயர் நீதிமன்றத்தில் 29.07.2022 அன்று தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் சரி. அதன்படி உயிலை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சாட்சிகளை விசாரித்து அதன் Findings ஐ உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அதன்பிறகு உயர் நீதிமன்றத்தில் அந்த மனு முடிக்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிவாசா 46 ஆவணமான உயில் பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் தெரியாது. என் கணவர் இறந்து ஒரு மாதம் கழித்து அவரது டைரியில் இருந்ததை எடுத்தேன். அந்த உயில் எழுதப்பட்ட உயிலா, தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் தட்டச்சு செய்யப்பட்டுதான் இருந்தது. அந்த உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் என் கணவரின் அண்ணன் பாலசுப்ரமணியம் மற்றும் என் கணவரின் நண்பர் வெங்காட்ராஜலு ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். வெங்கட்ராஜலு இன்று நீதிமன்றம் வந்திருக்கிறாரா என்றால் வந்திருக்கிறார். அந்த உயிலில் சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் மனைவிக்கும், இரண்டு மகள்களுக்கும் சொத்துக்கள் சேரவேண்டுமென்று என் கணவர் எழுதியுள்ளார். வெங்கட்ராஜலு

J. Rajarajeswari

கழுக்காணிமுட்டத்தை சேர்ந்தவர். அந்த உயில் பத்திரம் கிடைத்தவுடன் வக்கீலை பார்த்து அதை பதிவு செய்யவேண்டுமா என்று கேட்டேனாஎன்றால் அப்படி கேட்கவில்லை அந்த உயில் பத்திரம் இந்த வழக்கிற்கு தேவைப்படுமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன ஆலோசனை சொன்னார் என்றால் அவர் உயில் பத்திர சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று சொன்னார். அந்த உயில் பத்திரத்தை நீதிமன்றத்தில் எப்போது தாக்கல் செய்தேன் என்றால் சரியாக நினைவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என் கணவர் இந்த தேதியில் உயில் எழுதி வைத்திருக்கிறார் என்று சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. இந்த உயில் எந்த வருடம் எழுதப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் அதை படித்து பார்த்து 10.11.2019 அன்று எழுதப்பட்டது என்று தெரிந்து கொண்டேன். அந்த உயிலை அனுசரித்து பட்டா மாறுதல் கோரி விண்ணப்பித்தேனா என்றால் இல்லை. வக்கீலிடம் பட்டா மாறுதல் உயிலை அனுசரித்து செய்யலாமா என்று கேட்டேனா என்றால் இல்லை. என் கணவர் இறப்பதற்கு முன்பு உயில் எழுதி வைத்திருப்பதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. வழக்கு சம்பந்தமாக இந்த உயிலில் கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. பிரகாஷ் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் இந்த உயிலை தாக்கல் செய்யவில்லையா என்றால் நினைவில்லை. இந்த உயில் பத்திரம் என் வசம் தான் இருந்தது என்றால் ஆமாம். என் கணவர் உயில் எழுதி வைத்த விவரத்தை முக்கிய குடும்ப நபர்களிடம் முக்கியமான நாளில் சொன்னேனா என்றால் இல்லை. நான் உயிலை என் கணவர் இறந்த ஒரு மாதம் கழித்து என் கணவரின் டைரியில் இருந்து எடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதிலிருந்து தான் எடுத்தேன். டைரியில் அது பற்றி குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. உயிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த உயிலில் கிரிமினல் வழக்குகள் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. பிரகாஷ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்தேனா

J. Rajeswari

என்றால் பார்த்தேன். சீர்காழி இடத்தின் பத்திரம், மின் கட்டண ரசீது ஆகியவை தாக்கல் செய்துள்ளார். அவர் சீர்காழி இடத்தின் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. அவர் B1 முதல் B7 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவை என்ன ஆவணங்கள் என்று வக்கீலிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் ஆனால் தற்போது நினைவில்லை. B8 ஆவணம் என் மாமனாருக்கு எடுத்து ஸ்கேன் ரிப்போர்ட். B9 ஆவணமான Blue print ல் என் கணவர் ஜெயக்குமார் கையெழுத்து செய்திருக்கிறார். B11 மற்றும் B12 ஆவணங்கள் ஸ்ரீராம் சிட்பண்டில் என் கணவர் பணம் கட்டியதற்கான பாஸ்புக். B13 ஆவணம் 407 வேன் என் கணவர் வாங்கி விற்றதற்கான ஆவணம். B14 ஆவணம் 1995 ல் என் கணவர் பெயரில் இருந்த டெலிபோன் பில். B13 முதல் B22 வரையான ஆவணங்கள் என் கணவர் கச்சேரி ரோட்டில் உள்ள சொத்தில் தொழில் செய்துவந்தார் என்று காட்டுவதற்கான ஆவணங்கள் என்றால் சரி. கல்லுப்பட்டறை என்பது என் மாமனார் காலத்திலிருந்து செய்து வந்தது என்றால் சரி. அதன்பிறகு என் கணவர் செய்தார் நானும் ஆள் வைத்து செய்தேன். B23 முதல் B26 வரையான ஆவணங்கள் கருங்கல் பட்டறை வைத்து நடத்தியதற்கான ஆவணங்கள் என்றால் சரி. B27 ஆவணம் என் கணவர் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது என்றால் சரி. B28 ஆவணம் பண்டிகை காலத்தில் அந்த கடையில் பட்டாசு கடை நடத்த என் கணவர் பெயரில் கொடுத்த உரிமம் என்றால் சரி. B29 ஆவணம் DVC மனுவில் ஏற்பட்ட உத்தரவு என்றால் சரி. B30 ஆவணம் பிரகாஷ், ஜெயந்தி, கோபால் ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் பெற்ற Bail உத்தரவு என்றால் அது இனிமேல் என்னை அவர்கள் தொந்தரவு செய்யமாட்டேன் என்று சொன்னதன்பேரில் கொடுத்த நிபந்தணை பெயில் அதற்காக அதை தாக்கல் செய்தேன். பிவாசஆ 34 ஆவணமான வில்லங்க சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் என் மாமியார் ஐவநல்லூரில் உள்ள இடத்தை விற்று பில்டிங்கை கட்டியதாக சொல்லியிருந்தார். அந்த

J. Rajini Kumari.

ஐவநல்லூர் இடத்தை விற்கவில்லை என்று காட்டுவதற்காக வில்லங்கச்சான்று தாக்கல் செய்தேன். ஐவநல்லூரில் என் மாமனாருக்கு சொத்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. பிவாசஆ 35 ஆவணம் 01.01.1987 முதல் 17.06.2024 வரைக்கான வில்லங்கச்சான்று எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் அதுவும் ஐவநல்லூர் சொத்து சம்பந்தமான வில்லங்கச்சான்று. பிவாசாஆ 38 முதல் 41 வரையான ஆவணங்கள் ஸ்டேட் பேங்க் கடன் கட்டாததால் அனுப்பிய நோட்டீஸ் என்றால் சரி. பிவாசாஆ 42 ஆவணமான 04.11.2011 ல் சிதம்பரத்தில் என் பெயரில் சொத்து வாங்கியதற்கான கிரயப்பத்திரம் என்றால் சரி. பிவாசஆ 43 ஆவளணம் 19.05.2014 ல் 2ம் ஐட்ட வெள்ளாந்தெரு சொத்து என் கணவர் பெயரில் கிரயம் வாங்கியதற்கான கிரப்பத்திரம். பிவாசஆ 45 ஆவணம் என் கணவர் என் மாமியாருக்கு அவரது வங்கி கணக்கில் தொகை செலுத்தியதற்கான 88 செலான்கள் தாக்கல் செய்துள்ளேன். பிரகாஷ் பெயரில் உள்ள சொத்துக்களை தவிர தாவா சொத்துக்கள் பொதுக்குடும்ப பணத்தில் இருந்து வாங்கப்பட்ட பொதுகுடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. ஜெயக்குமாருக்கு எனக்கோ தனிப்பட்ட தொழிலோ வருமானமோ இல்லை என்றால் பொய்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

J. Rajeswari

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் [illegible] செய்து [illegible] சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/3/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

13/3/25